23rd March 1959]

Maternity cases

* 940 Q.—Sri K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of maternity cases attended to in Government hospitals in 1957 and 1958;

(*b*) in how many cases (i) still-born and (ii) deformed children were delivered; and

(*c*) in how many cases the mother did not survive the delivery?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) *to* (*c*) A statement[a] is placed on the table of the House.

(Sri S. Lazar was heard to say something.)

Mr. SPEAKER : May I ask the hon. Member Mr. Lazar what he was saying? He was saying something?

Sri S. LAZAR : I was just requesting the Chair to turn to this side also, Sir.

Mr. SPEAKER : Is not the hon. Member Sri Kandasami on this side of the House? It is very unfair to make an allegation like that. I overheard him say that, but this time I will not take any action.

The Hon. Minister may reply question No. 940.

The Hon. Sri M. A. MANICKAVELU : I have already answered the question, Sir.

Sri K. SATTANATHA KARAYALAR : பிரசவ விடுதிகள், பிரசவ ஆஸ்பத்திரிகள் இவைகளிலே ஆண் நர்சுகள் வேலை செய்கின்றார்களா? அப்படி வேலை செய்வது உண்மையானால், அதை உடனடியாக நிறுத்தி, அவர்களுக்குப் பதிலாக, பெண் நர்சுகளை நியமிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா?

The Hon. Sri M. A. MANICKAVELU : கேள்வி ஒரு மாதிரி இருக்கிறது. கனம் அங்கத்தினர் போடக்கூடிய உப கேள்வி வேறு மாதிரி இருக்கிறதே.

Sri A. A. RASHEED : Sir, from the statement placed on the table of the House, it is seen that the number of mothers who have died after delivery has increased in 1958. May I know the reasons?

The Hon. Sri M. A. MANICKAVELU : It is only a small increase of about 40. This is a fluctuating thing. We cannot give any particular reasons. Sometimes, it increases, sometimes it decreases.

Sri M. P. SUBRAMANIAM : 1957-லேயும் 1958-லேயும் ஸ்டில்-பார்ன் சில்ரனுடைய எண்ணிக்கை ஏறக்குறைய ஏழு சத விகிதம் இருக்கிறதே, இதற்கு என்ன காரணங்கள்? இதுவரையில் அது பற்றி ஆராயப்பட்டதா?

---

[a] Printed as Appendix I on page 393 infra.

[23rd March 1959

THE HON. SRI M. A. MANICKAVELU : இதற்கு ஒரு காரணம் சொல்லப்படுவது என்னவென்றால், வருஷத்திற்கு ஒரு பிள்ளை என்ற வகையிலே பிள்ளை பிறந்து கொண்டிருந்தால், அது தாயாரைப் பாதிக்கிறது, பிள்ளையையும் பாதிக்கிறது. அதற்காகத் தான் "ஸ்பேஸிங்" என்ற முறையிலே, மூன்று வருஷங்களுக்கு ஒரு தடவை, ஐந்து வருஷங்களுக்கு ஒரு தடவை பிள்ளை பெறுகிறது என்ற நியதி இருந்தால், இந்தச் சம்பவம் ஏற்படாது.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : பிரசவத்திற்குப் பின்னால் தாய் இறந்துபோகும் நிலை இருக்கிறது. அது ஆஸ்பத்திரிகளிலுள்ள டாக்டர்கள் சரியான முறையிலே கவனிக்காததால் ஏற்படுகின்றதா ? அல்லது அவர்களுடைய உடல் நிலைக் கோளாறினால் ஏற்படுகின்றதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இது அவர்களுடைய கோளாறினால்தான் ஏற்படுகிறதேயொழிய, டாக்டர்கள் கோளாறினால் ஒன்றும் இல்லை.

SRI V. K. KOTHANDARAMAN : போதுமான போஷாக்கான உணவு இல்லாத காரணத்தால் தான் இது போன்ற குழந்தைகள் பிறப்பதற்கு முன்னால் இறப்பதும், அங்கஹீனமாய்ப் பிறப்பதும், அதற்குப் பிறகு தாய் இறப்பதும் . . .

MR. SPEAKER : நீங்கள் உப கேள்வியாகக் கேட்பது மூலக் கேள்விக்கோ, அதற்கு அளிக்கப்பட்ட பதிலுக்கோ சம்பந்தம் உடையதாக இருக்கவேண்டும். உங்கள் உப கேள்வி அபிப்பிராயம் சொல்வதாக இருக்கிறது. கேள்வியின் போது அபிப்பிராயம் சொல்வதற்கு இடமில்லை. இந்தக் கேள்வி "அவுட் ஆப் ஆர்டர்".

Rural Dispensary at Kodukkur village

* 941 *Q*.—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether a rural dispensary was run at Kodukkur village, Udayarpalayam taluk, some years back by the District Board, Tiruchirappalli ;

(*b*) if so, when ; and

(*c*) the reasons for not continuing the same in that place?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) Till May 1943.

(*c*) It was closed for want of a doctor.

SRI K. R. VISWANATHAN : இப்போதாவது அந்த ஆஸ்பத்திரியை மறுபடியும் திறந்து அங்கு டாக்டரை நியமிப்பதற்கு அரசாங்கம் வேண்டிய முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அங்கே ஒரு ஆஸ்பத்திரி திறக்கலாம் என்று அரசாங்கம் ஏற்கெனவே அதற்கு "சாங்ஷன்" செய்துவிட்டது. பொறுப்பு ஜில்லா போர்டினுடையது. அவர்கள் செய்யவில்லை. ஆகையால், ஜில்லா போர்டு தான் இதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்.

Plantations

* 942 *Q*.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

இந்த ராஜ்யத்தில் ரப்பர், தேயிலை, காப்பி, யூகலிப்டஸ் (நீலகிரி தைலம்), தேக்கு ஆகியவைகள் எத்தனை ஏக்கர் பயிர் செய்யப்படுகிறது ? (ஜில்லாவாரியாக)